ஆயக்கட்டு சுமார் 1,018.33 ஆகும். இப்பொழுது 132 ஏக்கர் சாகுபடி செய்யப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அங்கத்தினர் கூறுகின்ற ஆறு, ஏரிகளுக்கு அந்தத் தண்ணீரைக் கொண்டுவர முடியுமா அதற்குச் செயற்குறிப்பு இருக்கிறதா என்பதற்குத் தனியாகக் கேள்வி போட்டால் விவரம் சொல்லலாம்.

Road connecting Rameswaram and mainland

* 392 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR:
THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the State Government have received any reply from the Union Government about the proposed road connecting Rameswaram and the mainland; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா. (அ & இ) இத் திட்டத்திற்கு மத்திய அரசு நிதி த் துறை ஒப்புதல் அளித்திருப்ப தாகவும் இதற்கான ஆணை கப்பல் போக்குவரத்து (சாலேப்பிரிவு) துறையிலிருந்து விரைவில் அனுப்பப்படுமென்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி. இதற்கான செலவு எவ்வளவு? இராமேஸ்வரம் மேம்பாலத் திட்டம் இந்த எஸ்டிமேட்டில் சேர்க்கப் பட்டு இருக்கிறதா?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: It is understood that detailed estimate has already been finalised and approved by the Government for Rs. 532–87 lakhs for construction of road bridge against Pamban strait on national highways 49. The cost of bridge works out to Rs. 481.86 lakhs and cost of approach road works to Rs. 51.01 lakhs.

திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இராமேஸ்வரத்திற்கும், தனுஷ்கோடிக்கும் ஏற்கனவே போடப்பட்டு வருகிற கடலோரப் பாதையில் பள்ளம் ஏற்பட்டு கடல் அரிப்பு ஏற்படுவதால் இதை மறுபரிசீலனை செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: கடலலைகளால் அரிப்பு ஏற்படாமல் இருப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றன.

1972 மார்ச் 9]

திரு. என். கே. பழனிசாமி : இந்த ரோடு தேசியப் பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த ரோடு ஆக இருப்பதால் இந்தச் செலவு பூராவையும் மத்திய அரசாங்கமே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று மாநில அரசு வற்புறுத்தி இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மத்திய சர்க்கார் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றுதான் நான் கருதுகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : வரவு செலவுத் திட்டத்திலே பாம்பன் பிரிட்ஜுக்கும் 5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. அதோடு இந்தத் திட்டத்தையும் சேர்த்துவிட்டால் இரண்டையும் முடிப்பது சுலபமாக இருக்குமே. எனவே அதற்கும் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பட்ஜெட்டிலே இந்தப் பாலத்தைப் பற்றித்தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சாலைப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

திருமதி த. ந. அனந்தநாயகி : 5 கோடி ரூபாய் பட்ஜெட்டிலே ஒதுக்கப்பட்டிருப்பது இந்த இரண்டுக்கும் சேர்ந்ததா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சேர்த்துத்தான்.

Overbridge near Jamalia

*393 *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the overbridge near Jamalia at Perambur has been closed for traffic a few years ago; and

(*b*) if so, the reasons therefor?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா . (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

Pine-apple processing factory in Kanyakumari district

* 394 *Q.*—Thiru J. JAMES : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether the Government received any representation, dated 25th June 1971, to start a pine-apple processing unit in the Co-operative Sector at Kulaseharam in Kanyakumari district; and

(*b*) if so, the action taken thereon?